# ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,124 பங்குனி மாதம்

# அருளாட்சிக்காக குருமாரியம்மன் அருள்வாக்குப் பணி



"சித்தர் நெறியை ஏற்றுச் செயல்படுத்தும் ஒவ்வொரு அடியானும், அடியாளும், அடியாரும் கடவுளர் வாழும் ஆலயம் ஆகிறுர்கள் என்பதே சித்தர் நெறி."

அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு

# உள்ளுறை

1. **"இந்துவேத முன்னேற்றக் கழகத்தின் முழக்கங்கள்"** - அரசியலுக்காக உருவாக்கப்பட்ட இயக்கமான இந்துவேத முன்னேற்றக் கழகம் (இ.மு.க.) என்னவெல்லாம் செய்யப் பாடுபடப் போகின்றது என்பதை விளக்கும் முழக்கங்கள்.
2. **"சுடலைப் பூசைமுறையும் பயன்களும்"** - விரகாலூரில் அமைந்துள்ள சுடலையில் நிகழும் பூசைக்கான விதிமுறைகளை வழங்கிடுவதன் மூலம் அனைத்து மாணுக்கருக்கும் விளக்கம் தரும் வகையில் குருதேவர் எழுதிய அஞ்சல்.
3. **"அருளாட்சிப் பணியின் தளபதிக்கு அறிவுரை"** - அருளாட்சி அமைப்புப் பணிக்குத் தளபதிகளாகப் பொறுப்பேற்றுச் செயல்படும் அனைத்து அடியான், அடியாள், அடியார்களுக்கும் குருதேவர் வழங்கிடும் அறிவுரைகளே இந்த அஞ்சலில் உள்ளன.
4. **"அருளாட்சிக்காக குருமாரியம்மன் அருள்வாக்குப் பணி"** - உலகத்திலேயே காரணைடைக் கருகுலத்தில் மட்டும் கோயில் கொண்டுள்ள குருமாரியம்மன் மூலம் அருள்வாக்குக் கூறும் பணியினை அனைத்து அடியான்களும், அடியாள்களும், அடியார்களும் மேற்கொள்வதற்காக குருதேவர் வழங்கிடும் செயல்முறை விளக்கம்.
5. **"அருளாட்சி அமைப்புப் பணி அறிக்கை எண்: 18"** - அருளாட்சி நாயகமான தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் வழங்கும் செயல்விளக்க அருளாணையை அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் குருதேவர் வழங்கிடும் அறிக்கை.
6. **"தமிழின அருளுலக அறிவிப்பு"** - தமிழ் நாட்டில் உள்ளவர்களுக்கு புரியும் வண்ணம் குருதேவர் தாமும், தமது வழி வாரிசுகளும் என்னென்ன பணிகளைச் செய்கின்றார்கள் என்பதை பொதுமக்களுக்கு விளக்கும் அறிவிக்கை.

# இ.மு.க.வின் முழக்கங்கள்

1. இ.மு.க.வை வளர்ப்போம், இந்தியாவைக் காப்போம்.
2. இ.மு.க. மூலம் அருட்படையை திரட்டுவோம்; அருளாட்சியை அமைத்திடுவோம்.
3. இ.மு.க.வின் மூலம் எல்லோருடைய உள்ளங்களிலும், இல்லங்களிலும் இந்துவேதமும், இந்துமதமும் இடம் பெறச் செய்வோம்.
4. இ.மு.க.வின் மூலம் எல்லாக் கோயில்களையும் பாதுகாப்போம்.
5. இ.மு.க.வின் மூலம் எல்லாக் கோயில் நிர்வாகத்தையும் தன்னாட்சி நிலை பெறச் செய்வோம்.
6. இ.மு.க. மூலம் கோயில் ஊழியர்களுக்கும் அரசு ஊழியருக்குச் சமமான சம்பளம் தரப்படும்.
7. இ.மு.க.வின் மூலம் ஒவ்வொரு கோயிலுக்கும் உரிய சொத்துக்கள், அந்தந்த கோயில்களின் நேரடி ஆட்சிக்குக் கொண்டு வரப்படும்.
8. இ.மு.க.வே அருளுலக பொருளுலக இருளை அகற்றும், இன்னலை நீக்கும்.
9. இ.மு.க.வே ஏட்டுப் படிப்பை நாட்டு நடப்புக்கு உரியதாக்கிடும்.
10. இ.மு.க.வே தொழிற்கல்வியை உயர்நிலைப் பள்ளியில் இருந்தே கற்றுக் கொடுக்க ஆரம்பித்திடும்.
11. இ.மு.க.வே வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கும்.
12. இ.மு.க.வே பணி ஓய்வு காலத்திற்கு முன்பே வேலையை விட்டு நீக்கும் ஆள் குறைப்பு திட்டத்தை ஒழிக்கும்.
13. இ.மு.க.வே எல்லாத் துறைகளிலும் கம்ப்யூட்டர்களை புகுத்தி ஆள் குறைக்கும் திட்டத்தைத் தடுத்து நிறுத்தும்.

14. இ.மு.க.வே விவசாயிகளுக்கு 60 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கும்.

15. இ.மு.க.வே நல்ல விளைச்சல் நிலங்களையும், ஏரி குளங்களையும் தூர்த்து வீடு கட்டும் திட்டத்தை தடுத்து நிறுத்தும்.

16. இ.மு.க.வே தொழிற்சாலைகள் எல்லாம் தலைநகரைச் சுற்றியே அமைப்பதை விடுத்து, நாடு முழுவதும் பரவலாக கிராமங்கள் தோறும் சிறிய சிறிய தொழிற்சாலைகளை உருவாக்கும் திட்டத்தைச் செயலாக்கும்.

17. இ.மு.க.வே மக்கள் கிராமங்களைக் காலி செய்து விட்டு தலைநகரங்களை நோக்கிக் குடியேற வருவதைத் தடுப்பதற்காக; அரசு அலுவலகங்களை மாவட்டங்கள் தோறும், வட்டங்கள் (தாலுக்கா) தோறும் பிரித்துப் பிரித்து அமைக்க ஏற்பாடு செய்யும். அதற்காக நாடு முழுவதும் புதிய புதிய வசதிகளை நகரத்தில் உள்ளது போல் பரவலாக தோற்றுவித்திடும்.

18. இ.மு.க.தான் மருத்துவ கல்லூரிப் படிப்பிற்கும், பொறியியல் கல்லூரிப் படிப்பிற்கும், தொழிற்கல்லூரி படிப்பிற்கும் மட்டுமே அதிக அக்கறையும், ஆர்வமும் நாட்டில் காட்டப்படுவதால்; நாடு முழுவதும் பரவலாக அதாவது, (தாலுக்கா தோறும்) வட்டாட்சி தோறும் ஏற்கனவே இருக்கின்ற கல்லூரிகளோடு இணைத்தோ அல்லது தனித்தோ புதிய கல்லூரிகள் உருவாக்கிடும். அதாவது அடிப்படையான உண்மைகளை, செயல்களை, கலைக் கல்லூரிகளிலேயே அனைத்து அறிவியல் நுட்ப வசதிகளுடன் எல்லோரும் படித்துக் கொள்ளும்படி வாய்ப்பு வசதி செய்து தரும்.

19. இ.மு.க.தான் படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கும். இதற்குரிய புதிய புதிய திட்டங்களை கீழை நாட்டு அறிஞர்களை வைத்து ஆய்வுகள் செய்து உருவாக்கிடும்.

20. இ.மு.க.தான் கட்டிட வேலைத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், மற்றும் பிற கிராம / குடிசைத் தொழிலாளர்கள் போன்றோர்களுக்கு முறையான பயிற்சிகள் கொடுத்து அவர்களுடைய ஊதியத்தை வரையறை செய்யும்.
21. இ.மு.க.தான் மீனவர்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் எல்லாவிதமான வசதிவாய்ப்புகளையும் உருவாக்கிக் கொடுக்கும்.
22. இ.மு.க.தான் இலஞ்சம், கையூட்டு, ஊழல் முதலியவைகளை முறையாக மேலிடத்திலிருந்து கீழிடம் வரை தடுத்து, அகற்றி, எல்லோரையும் பாதுகாத்திடும்.
23. இ.மு.க.தான் ஏற்கனவே உள்ள அரசியல் கட்சிகளால் அதாவது, ஆங்கிலேயர்களின் ஆட்சிக்குப் பிறகு பதவி ஏற்றிட்ட கட்சிகள் அனைத்தும் அரசாங்க ஒப்பந்தக்காரர்களை (காண்டிராக்டர்களை) தவறான முறையில் கையூட்டின் மூலம், பணிகளை அரைகுறையாகச் செய்யும்படி அநுமதிப்பதை முழுமையாகத் தடுத்து நிறுத்தி ஒப்பந்தக்காரர்கள் திட்டங்களை நல்லபடியாகச் செய்தேயாகிடும்படி செய்திடும்.
24. இ.மு.க.தான் கல்வியின் பெயரால், மருத்துவத்தின் பெயரால் எண்ணற்ற நிறுவனங்கள் பகற்கொள்ளை அடிப்பதைத் தடுத்திடும்.

**குறிப்பு:-** இப்படிப்பட்ட திட்டங்களை தன்னலமில்லாத, ஆசையே இல்லாத, பொதுமக்களின் நலத்தையே விரும்புகின்ற பத்தியுள்ளம் படைத்த அருளாளர்களால்தான் நிகழ்த்திட முடியும். அதாவது, தனிமனிதனின் வாழ்க்கை ஒழுக்கமாகவும், கட்டுப்பாடாகவும், பத்தியுணர்வு மிகுந்ததாகவும் இருந்தால்தான் குடும்ப வாழ்க்கை சிறப்பாக அமையும். குடும்ப வாழ்வில் பத்தியுணர்வு மிகுந்து இருந்தால்தான் குடும்பப் பற்று, பாசம், கட்டுப்பாடு, கட்டுக்கோப்பு, ... முதலியவைகள் சிறப்பாக அமைந்திடும். அப்படிக் குடும்பங்கள் கட்டுக்கோப்பாக சிறப்பாக அமைந்தால்தான் சமுதாயத்தில் சட்டதிட்டக்

கட்டுப்பாடுகளும், உண்மையான ஒழுங்கான சமுதாய நடைமுறைகளும், எல்லோருக்கும் பாதுகாப்பு உடைய புதிய புதிய கட்டமைப்புக்களும் செயல்பட்டிட முடியும். அத்தகைய நல்லதொரு நிலை வந்தால்தான் அரசியல் எனப்படும் துறைக்குத் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய (M.L.A.க்கள், M.P.க்கள்), சட்டசபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அருளாளர்களாக உருவாகிட முடியும். அப்பொழுதுதான் நல்லாட்சி கிடைக்கும். அத்தகைய நிலையை இ.மு.க.வால்தான் உருவாக்க முடியும்! இ.மு.க.வால்தான் உருவாக்க முடியும்!! இ.மு.க.வால்தான் உருவாக்க முடியும்!!!

**25 - 8 - 95**

**அருளாணை பெற்ற குருவாணை.**

**அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்.**

**//உண்மை நகல்//**
**//மூலம்: சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்திட்ட நகல். இறுதியில் குருதேவர் அவர்களின் கையெழுத்து இருந்தது. இந்த நகலில் இருந்த 15வது பத்தி மட்டும் இங்கே தரப்பட்டுள்ளது. முழுமையான கட்டுரை பின்னாளில் வெளியிடப்படும்.//**

# சுடலைப் பூசைமுறையும் பயன்களும்

தலைமைப்பீடம்,
2 - 8 - 89.

அருள்மிகு அன்பு மகள், செல்ல மகள், செல்வ மகள், பாச மகள், சமயபுரம் மாரியம்மன் சன்னிதானம் கி. சமுத்திரவள்ளிக்கு,

உன் ஞானத்தந்தை, பர பிறம்மம், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், நிறையக்ஞர், அண்டபேரண்ட அனாதிஆதிசத்திகள் சன்னிதானம், ஞானாச்சாரியார், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் விடுக்கும் **செயல்நலம் பாராட்டுத் திருவோலை**.

1) யாவும் நலமாகட்டும்! வெற்றியாகட்டும்! நல்ல பயன் நல்கட்டும்! உனது 1 - 8 - 89ஆம் தேதியிட்ட அஞ்சல் கிடைத்தது.

2) நீ, இதுவரையில் அனுப்பிய அஞ்சலைப் படித்து விட்டுத்தான் பதில் அனுப்பியிருக்கிறாய் என்று குறிப்பிட்டு இருக்கிறாய். மகிழ்ச்சி. பாராட்டுகிறோம். ஆனால், பொருளுலகின் பயம், அச்சம், கூச்சம், மாச்சரியம், கற்பனை, கனவு, பல்வேறு வகையான நடைமுறைகள் எதிர்பார்ப்புக்கள், நம்பிக்கைகள், கோட்பாடுகள், ... முதலியவைகளை-யெல்லாம் வைத்துக் கொண்டிருக்கும் பழமைவாதியாகவே வாழ்ந்து கொண்டிருக்கும் உன்னால்; பொருளுலக அருளுலக இருளகற்றும் பதினெண்சித்தர்களுடைய பகுத்தறிவு பூர்வமான, விஞ்ஞானப் பூர்வமான, உலகியல் கடந்த செயல்திட்டங்களையும், பயிற்சிகளையும், செயல் சித்தாந்தங்களையும், அணுகுமுறைகளையும் புரிந்து கொள்ள முடிகிறதா? அல்லது விரும்பி ஏற்றுக் கொள்ள முடிகிறதா? அல்லது இன்னும் சில மாதங்களோ அல்லது குறிப்பிட்ட ஆண்டுகளோ உன்னைத் தயாரித்துக் கொள்ள உனக்கு வாய்ப்பு வசதிகளும், கருத்து

விளக்கங்களும் தேவையா? என்பது பற்றி ஒன்றுமே எழுதவில்லை நீ.

ஏனென்றால், பல நூறுயிரக்கணக்கானவர்கள் நமது இயக்கங்களில் வந்து வந்து ஒரு சில பயிற்சிகளுடன் **<u>தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு</u>** விலகி விலகி நிற்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்களுக்குத் தெளிவும், துணிவும், போதிய நம்பிக்கையும் இல்லாததுதான். அதேபோல், நீயும் விலகி நின்றுவிடக் கூடாது. ஏனென்றால், நீ மிகமிகப் பெரிய பொறுப்புக்களில் இருக்கின்றாய். எம்மால் பரிந்துரைக்கப்பட்டு அருள்மிகு ஆத்தாள் சமயபுரம் மாரியம்மன் அவர்களால் முழுமையாக ஏற்கப்பட்டுள்ளாய். எமது முயற்சிகளும், பயிற்சிகளும் வீணாகி விடக் கூடாது.

எனவே, எமக்கு ஊசிமுனையளவு கூட வருத்தம் வராது. நீ, உனக்கு துணிச்சல் வரும்வரை எமது சுற்றுப்பயணங்களில் எம்மை வரவேற்க உன்னுடைய ஊரிலேயே இருந்தால் போதும் என்று எண்ணுகின்றோம். அதிலும், யாம் திருச்சி வரும்போதெல்லாம் ஓயாமெரிச் சுடலையிலும் சிறப்புப் பூசைகள் நிகழ்த்தப்படப் போகின்றன. அவற்றில் கலந்து கொள்ளக் கூடியவர்கள் எல்லாம் ஏறத்தாழ எல்லாத் தத்துவங்களையும் புரிந்து, செயல்களையெல்லாம் விரும்பி ஏற்று, அருளுலகப் பழக்கங்களோடு இரண்டறக் கலந்து விட்டவர்கள். அவர்கள் உலகியல் கடந்து பூசைகளை நடத்திக் கொண்டு இருப்பார்கள். அவற்றையெல்லாம் இயக்கத்துக்கு புதியதாக வந்துள்ள **<u>உன்னால் புரியவே முடியாது என்கின்ற போது, நீ ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது எப்படி எதிர்பார்க்க முடியும்.</u>**

எனவே, நீ தொடர்ந்து கிழக்கு மண்டலத்தின் தலைமைப் பொறுப்புக்களை ஏற்றுள்ள வண்ணம், மற்ற நமது இயக்க செயல்வீரர்களோடு விவாதித்து உன்னால் முடிந்தவரை செயல்திட்டங்களைத் தீட்டி நீயோ அல்லது உன்னுடைய பதிலிகளை அனுப்பியோ இரண்டு மாவட்டங்களிலும் (திருச்சி, தஞ்சை) நமது

இயக்கக் கிளைகளை துவக்கு. அருட்கோட்டங்களை அமைத்திடு. அருட்பணியை சிறப்பாக நடத்திடு. முடிந்தால் புள்ளம்பாடி சென்று திரு Dr. அமிர்தராசு மூலம் அங்கு வருவதற்கான ஏற்பாடுகள் செய். அது போதும்.

3) விரகாலூர் சுடலையில் நீ செய்த பூசைகள் மிகவும் சரியானவையே! தென்மண்டல நிர்வாகக் குழுவிற்கு (தென்மண்டல அ.வி.தி. தலைவர் திரு ச. துரைராசன் B.Sc., 115 புட்டுத்தோப்பு ரோடு, மதுரை - 10) சுடலைப் பூசை பற்றி விளக்கம் தேவை என்று ஒரு அஞ்சல் அனுப்பினுல் அங்கிருந்து விளக்கம் வரலாம். இதேபோல், D.M. திரு பெ. சுப்பையா அவர்களுக்கும், திரு A.P. திருஞானசம்பந்தம் அவர்களுக்கும் எழுதிக் கேட்டால் விளக்கம் வரலாம். முடிந்தவரை தலைமைப்பீடத்திலிருந்து சுடலைப்பூசை பற்றி விளக்கம் வரும். கவலைப்படாதே.

சுடலைப் பூசைக்கு உங்களுடைய பொருளாதார வசதிகளுக்கு ஏற்ப முட்டை, மீன், கோழி, ஆடு, இறைச்சி என்று எதை வேண்டுமானுலும் உணவுக் கடையில் சமைத்ததையே வாங்கிச் செல்லலாம். உயிரோடு பலிகொடுத்தும் அதை எரிகின்ற யாகத்தீயில் போடலாம். மேலும் அவல், பொட்டுக்கடலை, பொறி, வேர்க்கடலை, சுண்டல், ... முதலியவை எது வேண்டுமானுலும் போடலாம். சிறிதளவு போட்டுவிட்டு, மீதியை அருளூறு பூசனைப் பொருளாகப் பிறருக்கு வழங்கலாம். வீடுகளுக்கும் எடுத்துச் செல்லலாம். அப்படி யாகம் செய்த யாகச் சாம்பலோடு, சிறிது சுடலைச் சாம்பலையும் கலந்து எல்லோருக்கும் கொடுத்தனுப்ப வேண்டும். பாதிப்புள்ளவர்கள் விளக்கு மாடத்தில் இருக்கும் விளக்கிற்கு நெய் அல்லது எண்ணெய் வேண்டுமானுலும் ஊற்றலாம். யாகத்தில் அந்தந்த பருவக் காலங்களில் கிடைக்கக் கூடிய பழவகைகளையும் படையலாக வைத்துப் படைக்கலாம். அதாவது, யாகத்தீயில் போடுவதை அருளுலகத்தவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பதுதான் அருளுலகத் தத்துவம், சித்தாந்தம்.

4) பேய், பிசாசு, பில்லி, சூனியம், ஆவி, ஏவல், வைப்பு, கழிப்பு, மருந்து, ... போன்ற ஒன்பதும் கட்டாயமாக சுடலைப் பூசையில் விலகி விடும். சிறுகச் சிறுகவாவது அவற்றின் பாதிப்புக்கள் விலகி விடும். கவலை வேண்டாம். சுடலைப் பூசை செய்வதற்கு உன் போன்ற அருளாற்றல் பெற்றவர்களால்தான் முடியும். எல்லோராலும் முடியாது. எனவேதான், இன்றைய நிலையில் திருச்சி, தஞ்சை இரண்டு மாவட்டங்களில் யாராக இருந்தாலும், எத்தகைய பாதிப்புக்களாக இருந்தாலும் விரகாலூர் சுடலைக்கு வந்துதான் நலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அருளுலகத்தவர்களால் அறிவிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது.

**குறிப்பு:-**

(a) சுடலையில் அடிக்கடி கோழி, புறு, ஆடு, ... முதலியவைகள் அறுத்து அதன் குருதியை திரிசூலத்தில் விட்டால் சுடலை மிகுந்த சத்தியுள்ளதாக இருக்கும். அதனுல் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளவர்கள் வந்தால் அவர்களையே கூட பலிபொருள் வாங்கிக் கொண்டு வரக் கூறலாம். கட்டாயமாக பலி கொடுத்தல் நல்லது. இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து ஒரே ஒரு சுடலையில்தான் அருட்கோட்டம் வைக்கப்பட்டுள்ளது என்பதால்; அங்கு வருகின்ற நோயாளிகளிடம் இதற்கென்றே கூட வசூல் செய்து பலிபொருள் வாங்கிடலாம். வசதி படைத்தவர்களையும் சுடலைப் பூசைக்கு பலிபொருள் வாங்கிக் கொடுக்கக் கூறலாம்.

(b) பலி அறுத்ததும், குருதியை திரிசூலத்திலும், யாகத்திலும் காட்டிவிட்டு கி. சமுத்திரவள்ளியின் இரு கைகளிலும் பிடித்துக் கொண்டு, இடக்கையில் குழிபோல் பிடித்து குருதியை வைத்துக் கொண்டு வலக்கையில் பெருவிரலால் குருதியைத் தொட்டு முதலில் நம் இயக்கத்தவர்களுக்கும், பிறகு பாதிப்பாளர்களுக்கும் இட்டு விடலாம். ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வைத்துக் கொண்டு பலி கொடுக்கப்பட்ட குருதியை அத்தண்ணீரிலேயே நன்ருகக்

கழுவி விட வேண்டும். பிறகு உன் கைகளில் உள்ள இரத்தத்தையும் அந்தத் தண்ணீரில் நன்றாகக் கழுவி விட வேண்டும். அந்தத் தண்ணீரை கடுமையான பாதிப்புள்ளவர்கள் ஒரு கலயத்தில் வேப்பிலை வைத்து, தேங்காயுடன் கலசம் கட்டிக் கொண்டு வரக் கூறி அதில் சிறிது விடலாம். அத்தண்ணீரை அனைவரின் மீதும் தெளிக்கலாம். மேலும் கடை, வீடு, தோட்டம், ... முதலிய இடங்களிலும் தெளிக்கலாம்; பாதிப்புக்கள் நீங்கும்.

(c) சுடலையில் பலி கொடுத்து, அதை அங்கேயே சமைத்து படையல் போட்டுவிட்டு, சாப்பிட்டு விட்டு வருவதுதான் நல்லது. அல்லது வீட்டிற்கு கொடுத்து விட்டு சமைத்துவரக் கூறி அதைப் படையல் போட்டு படைத்து உண்ணலாம். உங்கள் ஊர் கிராமம் என்பதால், சுடலைக்கு அருகிலேயே ஒரு குடிசை போட்டு சமைக்கப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். குடிசை போடும் செலவை மக்களிடம் வசூல் செய்து கொள்ளலாம். தவறு இல்லை. இச் சுடலை இரண்டு மாவட்டங்களின் தலைமையாக இருப்பதால் நிதி வசூல் செய்து குடிசையை அமைக்கலாம். வாராவாரம் பலி பொருள் வாங்க கடைவீதிகளில் உண்டியல் வசூல் செய்யலாம். பலி கொடுக்கப்பட்ட இறைச்சியை மட்டும்தான் சுடலையில் சமைக்க வேண்டும். வீட்டில் சோறாக்கி வந்து இரண்டையும் கலந்து ஊன்சோறு (பிரியாணி) படைப்பதுதான் சித்தர்களின் மரபு; சங்ககால மரபு. இதுவே சுடலைப் பூசையின் வளர்ச்சிக்கும், வலிமைக்கும் பேருதவியாக அமைந்திடும்.

5) **<u>உன் தம்பிக்குரிய மருந்து விவரம்</u>**:- *[.. .. .. இந்த மருந்து விவரம் இவருக்கு மட்டும்தான் குருதேவரால் வழங்கப்பட்டுள்ளது என்பதால் இங்கே தரப்படவில்லை. .. .. ..]*

6) விரகாலூரில் உள்ள நம்பிக்கைக்கு உரியவர்களை புள்ளம்பாடிக்கு அனுப்பியாவது திரு Dr. S. அமிர்தராசு அவர்களைச் சந்தித்து, அங்கு ஒரு யாகசாலை வைக்க ஏற்பாடு செய். திரு Dr. அமிர்தராசு,

திரு Dr. துரைசாமி ... போன்ற நமது இயக்க அடியான்கள் கட்டாயமாக ஞாயிறன்று நடைபெறும் சுடலைப் பூசைக்கு வந்து கலந்து கொள்ள வேண்டும். குருவாணை என்று தெரிவி.

உடன் பதில் எழுதுக.

**அன்பு மகளே!**

**பல்வேறு அலுவல்களுக்கு இடையில் உனக்கு நெடிய பதில்கள் அனுப்பப்படுகின்றன. சோழப் பெருமண்டலத் தேவி ஆத்தாள் சமயபுரம் மாரியம்மன், ஆத்தாள் தேவி கருப்பழகி (போர்க்கால, போர்க்கோலக் காளியம்மன்) ... அருளும் ஆதரவும் உனக்கு இருப்பதால்தான். எனவே, உலகியல் மாயைகள், மடமைகள், அச்ச கூச்சங்கள், கற்பனைகள், ... கடந்து தயாராகிடு! தயாராகிடு!! தயாராகிடு!!! ... பிறகு, ... உன் விதி வழி செயல்படுக ....**

**(ஒப்பம்) உன் ஞானத்தந்தை,**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்.**
**2 - 8 - 89.**

**//உண்மை நகல்//**

நகல் நல்குபவர்:-

தலைமைப்பீடத் திருவோலை நாயகம்,

கபாலீசுவரி சன்னிதானம், சித்தரடியார் வேம்பை சீ.மணி,

5-8-89.

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது. இறுதிப் பத்தி குருதேவர் அவர்களுடைய கையெழுத்திலேயே இருந்ததாகத் தெரிகின்றது.//**

# அருளாட்சிப் பணியின் தளபதிக்கு அறிவுரை

தலைமைப்பீடம்,
8 - 9 - 89.

அருள்மிகு பாசமகள்! அன்பு மகள்! செல்வ மகள்! செல்ல மகள்! அருள்மிகு தேவி சமயபுரம் மாரியம்மன் சன்னிதானம் சித்தரடியாள் கி. சமுத்திரவள்ளி (வடக்குத் தெரு, விரகாலூர் P.O., திருச்சி - 621722) அவர்கள் அருட்சமூகத்திற்கு,

உனது ஞானத்தந்தை, ஞானாச்சாரியார், தலைவர், குருமகாசன்னிதானம், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் விடுக்கும் வாழ்த்துத் திருமடல்.

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பன்கள் திருவருளே!

2) உனது 5-9-89ஆம் தேதியிட்ட கடிதம் கண்டு மிக்க மகிழ்ச்சி. நன்றி! வாழ்த்து! நீ என் மகள் என்பதால் உனக்கு ஏராளமான பாதுகாப்புக்களும், எல்லையற்ற அருளும் வழங்கி-யிருக்கிறோம். உன் வாழ்க்கையில் எல்லா வகையான நலன்களும், வளங்களும், வெற்றிகளும் உண்டாகும். கவலைப்படாதே! உன் தந்தை மூலம் பெருமுயற்சி செய்தாவது உன் வேலைக்குக் கேட்கிற முன்பணத்தைக் கொடுத்து சேர்ந்திட முற்படு.

3) உனக்காகத்தான் கோவை மாவட்டத்தில் 1-9-89ஆம் தேதியில் நடைபெற்ற மேற்கு மண்டலத்தின் மூன்றாவது நிர்வாகக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள சென்றிருந்தவர்கள் நேராக மதுரை

வந்து, அங்கிருந்து தஞ்சை வந்து 2-9-89இல் நடைபெற்ற கிழக்கு மண்டல முதலாவது நிர்வாகக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர் தென்மண்டல நிர்வாகக் குழுவினர். இந்த நிர்வாகக் குழு கூட்டம் முழு வெற்றி பெற்றிருக்கின்றது. அருள்மிகு ஆத்தாள் தேவி சமயபுரம் மாரியம்மன் உன் மூலம் நிறைய திருவிளையாடல் செய்ய விரும்புகிறாள். தாத்தாவும் அருளாட்சி அமைப்புப் பணியில் உனக்கு சிறந்த இடத்தை கொடுத்து இருக்கிறார். இவற்றைப் புரிந்து யார் அழைத்தாலும் அவர்கள் வீட்டிற்குச் சென்று மந்திரித்து அருள் வழங்கு.

ஏழை மக்கள் அதிகம் என்பதால் 8 முதல் 18 வாரங்களுக்கு அவர்கள் வீட்டில் கலசம் வைத்து பூசையை செய்யச் சொல்லு. கலசத்திற்குள் வைக்கக் கூடிய சக்கரம் பலநூறு ரூபாய் மதிப்புள்ளது. அவர்கள் கொடுக்கக் கூடிய காணிக்கையை மகிழ்ச்சியோடு வாங்கிக் கொண்டு; அவர்களை ஒரு மண்கலயம் அல்லது செப்புச் சொம்பில் மஞ்சள் நீர் கரைத்து வேப்பிலை வைத்து வரக் கூறி, அந்தக் கலசநீரில் சக்கரம் போட்டு மந்திரித்து அனுப்பு. ஏனென்றால், ஏழை மக்களில் தேங்காய் கூட வாங்க முடியாதவர்களே அதிகம்.

அவர்களை அந்தக் கலசத்தை வாராவாரம் அதாவது ஏழு நாட்களுக்கு ஒருமுறை வசதி போல் சுடுகாட்டு யாகத்திற்கு அல்லது தனவள நல்லூர் அருட்கோட்ட யாகத்திற்கு வரச்சொல்லி, கலசத்தை யாகத்தீயில் காட்டி மந்திரித்துத் தாருங்கள். ஆனால், அப்படி கொடுக்கும்போது யாராக இருந்தாலும் அவர்களை உரத்த குரலில் மூன்று முறை;

**“நாங்கள் அருளாட்சிக்காக எதையும் செய்வோம். தஞ்சாவூரில் உள்ள அருளாட்சி நாயகமான தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞானகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார்**

**அவர்கள் அண்டபேரண்ட அருட்பேரரசராக இருந்து விடுக்கின்ற அருளாணைகள் அனைத்தையும் செயலாக்குவோம். அவருடைய பேரருள இன்றைய குருதேவர், குருபீடம், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் ஆகிய ஞானாச்சாரியார் அவர்கள் விடுக்கக் கூடிய குருவாணைகளை உடனடியாக ஏற்று முழுமையாக நிறைவேற்றுவோம். இது முக்காலமும் உறுதி. எங்களைக் காப்பாற்ற வேண்டும். எங்களுக்கு அருளுலகத்தவர்களின் துணையும், பாதுகாப்பும் வேண்டும்"**

என்று கூறச் சொல். இந்தக் கலசத்தை அவர்கள் வீட்டிற்கு கொண்டு சென்று வைத்து, மீண்டும் அடுத்த வாரம் யாகத்திற்கு வரும்வரை அன்றாடம் அவர்கள் வசதி கிடைக்கும் போதெல்லாம் ஏதாவது ஒரு நேரத்தில் ஊதுபத்தி பற்ற வைத்து, கற்பூரம் காட்டி கும்பிட்டு வீட்டில் தாங்கள் சாப்பிடும் பழைய சோறாக இருந்தாலும் அதை படைத்து விட்டுக் காக்கைக்கு சிறிது வைக்க வேண்டும். கலசநீரை அன்றாடம் சிறிதளவு வேப்பிலையினால் (அதிலேயே இருக்கும் வேப்பிலை) வீடு முழுக்க தெளிக்க வேண்டும். இப்படி வாரம் முழுவதும் தெளித்து விட்டு கடைசி நாளன்று கலச நீரை முழுவதும் தெளித்து விட்டு; நன்றாக கலயத்தைக் கழுவிக் கொண்டு முன்போல மஞ்சள் நீர் நிறைத்து வேப்பிலை வைத்துக் கொண்டு வரக் கூறு.

கலயம் கழுவும் போது அதில் உள்ள சக்கரத்தைப் பத்திரமாக எடுத்து வைக்க வேண்டும். கலசத்திற்குரிய சக்கரம் உன்னிடம் இருக்கும் என்று நினைக்கின்றோம். தேவையானால் அனுப்பி வைக்கின்றோம். கவலை வேண்டாம். இவற்றிற்கு வாராவாரம் வரும்போது ரூ. 3.00 காணிக்கை தரச் சொல். தலைவலி என்று டாக்டரிடம் சென்று ரூ. 5, ரூ. 10 என்று செலவழிக்கும் மக்கள், அருட்பணிக்கு ரூ. 3, ரூ. 5 என செலவழிப்பதில் தவறில்லை. உனது விருப்பப்படி முடிவு எடுத்துக் கொள். ஆனால், ரூ. 4.25 காணிக்கை கூடத்

தரலாம். வாங்கிக் கொள். எல்லா பயனும் விளையும். மற்றபடி உன் விருப்பம்.

4) சென்னையிலிருந்து திருச்சி வந்து பிறகு சென்னை திரும்பும் அனைத்து செலவையும் (போக்குவரத்து) தலைமைப்பீடம் ஏற்றுக் கொள்ளும். விரகாலூரில் யாரும் செலவு செய்ய வேண்டாம். மேலும் உன்னிடம் பொருளாதார வசதியில்லை என்றால் கவலைப்படாதே. இவ்வளவு காலம் உன்னிடம் மந்திரித்துக் கொண்டவர்களிடம் குருதேவர் வருகிறார் என்று கூறி ரூ.10 வீதம் வசூலித்தாலே போதுமே. நம்மவர்களிடமும் வசூலித்தால் போதும். யாம் அங்கு வந்து கவனித்துக் கொள்கிறோம். உன் தந்தை மூலம் அந்த ஊர் வட்டாரப் பெரியவர்களிடம் குருதேவர் வருகைக்காக நிதி வசூல் செய்யலாம். இவையெல்லாம் இயலாவிட்டால் கவலைப்படாதே. யாம் அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் அங்கு வருகிறோம். உனக்குத் தொல்லை தர மாட்டோம். யாம் திருச்சி வருவதை மட்டும் உங்கள் வட்டார அடியான்களுக்கு அறிவித்து விடு. யார் யார் எம்மை பார்க்க விரும்புகிறார்களோ அவர்கள் எம்மை திருச்சியில் வந்து சந்தித்துக் கொள்ளட்டும்.

5) கிழக்கு மண்டலத்தைச் சேர்ந்த ஒரு பகுதிதான் திருச்சி மாவட்டம். மற்றொரு பகுதி தஞ்சை மாவட்டம். எனவே, யாம் தஞ்சை மாவட்டம் சுற்றுப்பயணம் செய்து விட்டு சென்னை திரும்புகிறோம். யாராவது ஒருவர் துணையோடு நீ வந்து சந்திக்கலாம். சந்திக்க இயலவில்லையென்றாலும் கவலைப்பட வேண்டாம்.

6) நீ உங்களுடைய வட்டார மக்களுக்கு ஒரு அருளூற்றாக விளங்கி அவர்களுடைய தேய்நிலைகளையும், நோய்நிலைகளையும், மற்ற பாதிப்புக்களையும் அகற்றி அருட்தொண்டு செய்தால் அதுவே போதும். பலரை தீவாளி வரும்போது சிவப்பு சேலை வாங்கிக் கட்டிக் கொள்ளச் சொல். ஆண்கள் சிவப்பு வேட்டி வாங்கி

அணிந்து கொள்ளச் சொல். வழக்கம் போல் வெள்ளை ஆடை வேண்டாம் எனக் கூறு. ஏனென்றால் உங்கள் வட்டாரத்தில் ஏழைகள் அதிகம்.

7) அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் சன்னிதானமாகிய உன் காலில் மங்கையர்க்கரசியைப் பிடித்த மந்திரவாதி விழுந்தது பெரிய அதிசயம் இல்லை. இதைவிட கொடிய பெரிய பேய் பிசாசுகள் கூட, காற்றுக்கள் கருப்புக்கள் கூட, பில்லி சூனியம் கூட உன் காலில் விழுந்து வணங்கி புறமுதுகிட்டு ஓடி விடும். எனவே, நீ அன்றாடம் குறைந்தது ஒருமுறையாவது சிவபுராணத்தையும், காயந்திரி மந்தரம், மந்திரம், அருட்சினை மந்திறம், கற்பூரச் சோதி வழிபாட்டு மந்தரம்... இந்த நான்கு மட்டுமாவது ஓதிப் பூசை செய்து உனக்கு அருள் ஏற்றிக் கொள். திரு D.M. பெ. சுப்பையா அவர்களிடம் விளக்கம் பெற்றுப் பூசாமொழி வாசகத்தில் உள்ள முன்னுரையையும், இ.ம.இ. கொள்கை விளக்கத்தையும் பலமுறை திருப்பித் திருப்பிப் படித்து உன் அறிவை வளர்த்துக் கொள்.

8) நீ ஒரு மண்டலத்திற்கே தலைவியாகச் செயல்படப் போகிறவள். அசட்டையாக இருந்து விடாதே. சோம்பேறியாக இருந்து விடாதே. புரிந்து விருப்பமுடன் செயல்படு. உங்கள் ஊரில் உள்ள மாரியம்மன் கோயிலில் நம்மவர்கள் அனைவரும் ஒன்று கூடி (வாரம் ஒருமுறை) நமது பூசாமொழி வாசகங்கள் அனைத்தையும் கூறி கூட்டு வழிபாடு செய்யுங்கள். இதற்கு பதினெண்சித்தர் சிவசத்தி வார வழிபாட்டு மன்றம் எனப் பெயர் வைக்கவும். அங்கு ஏதாவது பிறச்சினை ஏற்படும் என்றால் தங்கள் வீட்டருகில் இருக்கும் மரத்தடியில் அமைந்திருக்கும் மாரியம்மன் வழிபடும் இடத்திலும் அமைத்துச் செயல்படலாம். உனக்கு எல்லா வெற்றிகளும் கிடைக்கும். அருளுலகத்தார் உன்னை **"நடமாடும் தேவமகள், தெய்வமகள்"** என்று பாராட்டுகிறார்கள். இதற்கு ஏற்பச் செயல்படு. அச்சம்,

இச்சை, கூச்சம், மாயைகள், கற்பனைகள், மடமைகள், பெண் என்ற தாழ்வு மனப்பான்மை இவற்றையெல்லாம் விட்டுவிட்டு அருளாட்சிப் பணியின் ஒரு பெரிய தளபதிகளில் ஒருத்தியாக செயல்படு. வெற்றியுண்டாகட்டும். அடிக்கடி அஞ்சல் எழுது.

உடன் பதில்.

**அன்பு**
**ஞானத்தந்தை,**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்,**
**9 - 9 - 89.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது. இறுதியில் குருதேவர் கைப்பட கையொப்பம் இட்டிருந்தார்.//**

# அருளாட்சிக்காக குருமாரியம்மனின் அருள்வாக்குப் பணி

தலைமைப்பீடம்,
5 - 9 - 89.
இரவு 7:35 மணி.

இன்றைய அருளாட்சி நாயகமாகிய தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் குருவாணை.

பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, அருளாட்சி நாயகத்தின் குருவாணை ஓலை நாயகம், குருதேவர், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் வழங்கும் அருளாணை செயல்விளக்கம்.

1) அருள்வாக்கு கூறும் நிலையத்தை அல்லது கோயிலை அல்லது அருட்கோட்டத்தை அமைக்க விரும்புகிறவர்கள் நேரடியாகத் தலைமைப் பீடத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

2) சுமார் 2½ அடி முதல் 3 அடி திரிசூலம் ஒன்றை தயாரித்து வைத்துக் கொண்டால் போதும்.

3) தலைமைப்பீடத்திலிருந்து பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அருளாட்சிக்காக உருவாக்கியுள்ள இம் மண்ணுலகின் 12வது குருமாரியம்மன் கோயிலின் பிடிமண்ணும், பதிவு சக்கரமும் அனுப்பப்படும்.

4) இவற்றை வாங்குபவர்கள் குறைந்தது 5, 6 பேர் உட்காரும் அளவிற்கு வசதியாக உள்ள சொந்த இடத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு முழ ஆழம் தோண்டி இவற்றை உள்ளே வைத்து விட வேண்டும். அதாவது வீட்டிற்குள் கூட வைத்துக் கொள்ளலாம்.

வீட்டுத் திண்ணை, வீட்டு வாசல், வீட்டுப் பின்புறம், பூசையறை, சொந்த நிலம், தோட்டம், ... முதலிய எந்த இடமாக இருந்தாலும் சரி, அங்கு இவற்றை ஒரு முழம் ஆழத்தில் உள்ளே வைத்து அதைத் தொடுகின்ற மாதிரி திரிசூலத்தை வைத்துக் குழியை மூடிவிட வேண்டும். அதாவது இந்தத் திரிசூலம் தரைக்கு மேலே 1 சாண் உயரத்தில் இருந்து 1 முழ உயரத்திற்கு மேலே இருக்கக் கூடாது.

5) வாரத்தில் 3 முதல் 5 நாட்கள் கூட அருள்வாக்கு கூறலாம். அதாவது யார் அருள்வாக்கு கேட்க வந்தாலும் வெற்றிலை, பாக்கு, பூ கொண்டு வந்தால் போதும். அந்தப் பூவை திரிசூலத்தில் போட வேண்டும். அவர்கள் குங்குமம் கட்டாயம் 50 பைசாவிற்காவது வாங்கி வர வேண்டும். அந்தக் குங்குமத்தை 18 முறை தாத்தாவின் அருட்பட்டங்களையும், குருதேவரின் அருட்பட்டங்களையும் கூறி குருமாரியம்மனின் அருளால் இவருக்குரிய அருள்வாக்கு கிடைக்கட்டும் என்று வாழ்த்துங்கள்.

பிறகு அவருடைய குறை என்ன? என்னென்ன ஐயங்கள் இருக்கின்றன என 7, 8 கேள்விகளை எழுதித் தரக் கூறுங்கள். அக் கேள்விகளுக்கு மட்டும்தான் பதில் வரும் என்று கூறுங்கள். அதாவது திருமணம் நடக்கவில்லை, தொழில் நடக்கவில்லை, காடு விளையவில்லை, வீடு கட்ட முடியவில்லை, ... அப்படிச் சொன்னார்களானால் அது கிரகக் கோளாறா? யோகம் இல்லையா? மந்திரவாதிப் பாதிப்பா? உலகியல்படி ஏதாவது செய்ய வேண்டுமா? அல்லது நமது பீடத்தில் இருந்து சக்கரம், தாயத்து ஏதாவது வாங்கினால் சரியாகி விடுமா?

என்று பதில் கூறப்படும். இதைப் பற்றி அருள்வாக்கு கூற வருபவர்களிடம் முன்கூட்டியே விவரமாகச் சொல்லி விட வேண்டும்.

அருள்வாக்கு அருள்சீட்டுக்காக வாங்கும் ரூபாய் 5ஐ உடனுக்குடன் உண்டியலில் போடுங்கள். (இந்த உண்டியலின் மீது குருமாரியம்மன் என்று எழுதி சீட்டு ஒட்டி வையுங்கள்). இந்த உண்டியலே மஞ்சள் துணியால் போட்டு எப்பொழுதும் கட்டி வைத்திருக்க வேண்டும்.

உண்டியல் நிறைந்த பிறகு அனுப்பலாம். அருள்வாக்கு கேட்பவர்கள் பற்றி உங்களின் கருத்து ஏதாவது இருப்பின் அதையும் அனுப்பலாம். அருள்வாக்கு சொல்லக் கூடிய குருபீடத்திற்கு அவர்கள் கைப்பட ரூ.10, ரூ.20 என்று அனுப்பக் கூறலாம். இல்லேயென்ருல் வேண்டாம். அவர்களுக்குப் பூசைகள் செய்து பூசனேப் பொருள் அனுப்ப வேண்டுமென்று அவர்கள் விரும்பிஞல் பூசைச் செலவு ரூ.10, ரு.20 என்று அனுப்பக் கூறுங்கள்.

இது அருளாட்சிக்காக என்பதால் எல்லோருமே இது பற்றி அதிக அக்கறை எடுத்து ஆங்காங்கே அருள்வாக்கு மையங்கள் அமையுங்கள். இதன் மூலம்தான் பதினெண்சித்தர் பீடத்தின் அருளாட்சி அமைப்புப் பணியை வெற்றி பெறச் செய்திட முடியும். மக்கள் மத்தியில் ரூ.5/-தான் காணிக்கை என்பதால் நிறைய பேர் வருவார்கள். நல்ல விளம்பரம் கிடைக்கும்.

இதஞல் யார் வந்தாலும் உடனுக்குடன் ஒரு பெரிய பேரேடு நோட்டுப் புத்தகத்தில் அவர்கள் கைப்படவே அவரின் வீட்டு முழு முகவரி, அவருடைய வயது, அலுவல் முதலியவையை மட்டும் குறிக்கச் சொல்லுங்கள். வந்த நேரம், தேதி, கிழமை தெளிவாகக் குறிப்பிடச் சொல்லுங்கள். இதை சிறப்பாக எல்லோருமே செய்ய வேண்டும். வாராவாரம் கிடைக்கக் கூடிய அருள்வாக்குகளே

மொத்தமாகத் தொகுத்து ஒரே அஞ்சலில் அனுப்பினால் அஞ்சல் செலவு மிச்சமாகும்.

6) கூடுமானால் யார் வந்தாலும் ரூ.5/-தான் காணிக்கை என்பதால் அவரிடம் சிறிது குங்குமத்தை மடித்துக் கொடுத்து அவருடைய அருள்வாக்கு கேள்விகளை ஒரு வெள்ளைத் தாளில் எழுதி கீழே உங்களின் கையெழுத்தைப் போட்டு அவர்களிடமே கொடுத்து அவர்களையே ஒரு கவரில் குருதேவரின் முகவரிக்கு அனுப்பி விடும்படி கொடுத்து விடுங்கள். குருதேவரிடமிருந்து பதில் வருவதற்காக அவர்களின் வசதி போல் ரூ.2 முதல் ரூ.5 வரை தபால் தலை வைத்து அனுப்பக் கூறுங்கள். எதுவும் கட்டாயம் இல்லை. ஒரு கவர் மட்டும் அனுப்பினால் போதும். அவர்களுக்கு பதினெண்சித்தர் பீடம், மடம், குருமாரியம்மன் கோயில் திருநீறு, குங்குமம் தேவை என்றால் அவர்களின் விருப்பப்படி காணிக்கையை M.O. மூலம் அனுப்பக் கூறுங்கள். உங்களுக்கு சுமை குறையும். உங்களையே அனுப்பக் கூறினாலும் அனுப்பி வையுங்கள்.

<u>**குறிப்பு**</u>:-

மேற்கொண்டு இதில் ஐயம் என்றால் தலைமைப்பீடத்திற்கு எழுதிப் போட்டு கேட்டுக் கொள்ளுங்கள்.

**(ஒப்பம்) குருதேவர்.**

**//உண்மை நகல்//**

***<u>நகல்கள் தயாரிப்பு:-</u>*** **தென்மண்டல நிர்வாகக் குழு, மதுரை.**

**//இதன் மூலநகல்: மதுரை சித்தரடியான் திரு துரைராசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# அருளாட்சி நாயகமான அண்டபேரண்ட அருட்பேரரசரின் செயல்விளக்க அருளாணை

## அருளாட்சி அமைப்புப் பணி அறிக்கை எண்: 18

10-10-1989.

1) அருட்போர் அறிவிக்கப்பட்டு அருளாட்சி அமைப்புப் பணி அருளுலகத்தவர்களால் விரைந்தும் விரிந்தும் நிகழ்ந்து வருகின்றன. ஆனால், அருளாளர்களான நமது அடியான்களிலும், அடியாள்களிலும், அடியார்களிலும் பலர் இன்னும் பழைய நிலையிலேயே இருக்கின்றார்கள். இவர்களுக்கு இடையில் அருட்போர்க் கால எச்சரிக்கை நிலையும், விழிப்பு நிலையும், சுறுசுறுப்பு நிலையும் விரைந்து உருவாகிடல் வேண்டும்.

2) நம்மவர்களுக்கு இடையில் கணிசமானவர்கள் தங்கள் தங்களுடைய சொந்த விருப்பு வெறுப்புக்களாலும், கோபதாபங்களாலும், ஆசைகளாலும், வெறிகளாலும், உலகியலில் ஏற்பட்டு விட்ட குறைகளையும், வருத்தங்களையும், தொல்லைகளையுமே மனதில் கொண்டு தனித்து நிற்கின்றார்கள். அதாவது, சாதாரண மனித நிலையில் இருந்து கொண்டே நமது அருளாளர்களில் பலர் பிறரோடு சேர்ந்து செயல்பட மறுக்கிறார்கள். அதேபோல் பிறர் தங்களோடு சேர்ந்து செயல்படவும் மறுக்கிறார்கள். இப்படிப்பட்ட இவர்கள் தங்களுக்குத் தாங்களே கேடு செய்து கொண்டவர்கள் ஆவார்கள். அத்துடன் இவர்கள் சித்தர் நெறிக்கும், இந்து மறுமலர்ச்சி

இயக்கத்திற்கும், அதன் கீழுள்ள 48 வகையான நிறுவன நிருவாகங்களுக்கும் மிகப்பெரிய கேடு செய்தவர்கள் ஆவார்கள். எனவே, இவர்கள் உடனடியாகத் தங்களுடைய தவறுகளை உணர்ந்து திருந்திக் கொள்ள வேண்டும்; அல்லது திருத்தப்படுவார்கள் அல்லது வருத்தமுற்று ஏமாற நேரிடும்.

3) நம்மவர்களில் பலர் பதினெண்சித்தர் மடத்திற்கும், பீடத்திற்கும், கருகுலத்திற்கும் உரிய தங்களுடைய காணிக்கைகளையும், பிறரிடம் வசூல் செய்த காணிக்கைகளையும், சொத்துக்களையும் இன்னும் தங்களிடமே வைத்துக் கொண்டுள்ளார்கள். இந்த அறியாமை நீங்கிட வேண்டும். சிவன் சொத்தை யாரும் சொந்தம் கொண்டாட முடியாது. எச்சரிக்கை. எனவே மேற்படி நிலைகளில் உள்ளவர்கள் தாங்களாகவே முன்வந்து மடத்திற்கும், பீடத்திற்கும் உரியவைகளை ஒப்படைத்து விட வேண்டும். இதனால் அவர்கள் மிகப்பெரிய நன்மைகளை அடைவார்கள். இதுகாறும் செய்திட்ட தவறுகளுக்கு மன்னிப்பையும் பெறுவார்கள்.

4) நம்மவர்களில் குறிப்பிட்ட சிலர் அருளாட்சி அமைப்புப் பணிக்கு எதிராகவே துணிந்து செயல்படுகிறார்கள். இவர்கள் நீராடச் சென்று சேற்றைப் பூசிக் கொண்டு வந்தவர்களுக்குச் சமமாவார்கள். எனவே, இவர்களெல்லாம் திருந்த வேண்டும். யார் தடுத்தாலும், யார் முயன்றாலும் அருளாட்சி அமைப்புப் பணியைத் தடுக்க முடியாது. எனவே, யாரும் இனிமேல் சிறுபிள்ளைத்தனமாக மடத்திற்கோ, பீடத்திற்கோ, கருகுலத்திற்கோ எதிராகச் செயல்பட வேண்டாம். எச்சரிக்கை.

5) நம்மவர்கள் மெய்ஞ்ஞானக் கொடி ஏற்றுவதையும், அருட்கோட்டங்கள் அமைப்பதையும், பிறருக்கு அ.வி.தி. பணி செய்வதையும் அருளூறச் செய்யும் சிறந்த சித்தி பூசையாகக் கருத வேண்டும்.

6) நம்மவர்கள் தவங்களையும், பிற பூசைகளையும் செய்வதற்குச் சமமாக எண்ணி அ.வி.தி. பணியை முழுமனதுடன் செய்ய வேண்டும். அதனால் முழுமையாக அருளுலகப் பொருளுலகச் சத்திகளும், சித்திகளும் கிடைக்கும்.

7) நம்மவர்களில் ஒவ்வொருவரும் மற்றவர்களை அருளுலகத்தவர்களாகவே எண்ணி ஏற்றுப் போற்றிப் பயன்படுத்த வேண்டும், பழக வேண்டும். ஏனென்றால், நம்மவர்களுக்குள்ளும் அருளுலகத்தவர்கள் எழுந்தருளுகிறார்கள். இந்தத் தத்துவம்தான் சித்தர்நெறியின் சிறந்த தத்துவம். அதாவது, **சித்தர் நெறியை ஏற்றுச் செயல்படுத்தும் ஒவ்வொரு அடியானும், அடியாளும், அடியாரும் கடவுளர் வாழும் ஆலயம் ஆகிறார்கள் என்பதே சித்தர் நெறி.**

8) நம்மவர்களுக்கு இடையில் எந்த உலகியல் காரணங்களாலும் பிரிவோ, பிளவோ, முறிவோ ஏற்படக் கூடாது. அப்பொழுதுதான் நம்மவர்கள் அருள்நெறி பரப்பும் திருநெறிச் செல்வர்களாகிட முடியும்.

9) இன்றைய அருளாட்சி அமைப்புப் பணி கணிசமான அளவு தனிமனிதர்களுக்குச் சித்திகளைத் தந்தே நிகழ்த்தப்பட வேண்டும் என்ற செயல்நிலையைப் பெற்றிருக்கிறது. இதனை இனிமேலாவது நம்மவர்கள் தெளிவாக உணர்ந்து ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவு தங்களைத் தாங்களே தனிமனிதச் சத்திக்கும், சித்திக்கும் உரியவர்களாக ஆக்கிக் கொள்ள முற்படல் வேண்டும். அதாவது, எந்தவொரு தனிமனிதனும் தங்களுடைய குடும்பத்தார், உற்றார், உறவினர், நண்பர் என்று பிறரைப் பற்றி எண்ணிக் கொண்டிராமல் தங்களைத் தாங்களே உடனடியாகச் சரணாகதித் தத்துவப்படி குருபீடத்தில் முழுமையாக இணைந்து இரண்டறக் கலந்து அருளுலகச் செயல்நிலையைப் பெற வேண்டும்.

10) ஒவ்வொரு தனிமனிதரும் தங்களுடைய முற்பிறப்பு, மறுபிறப்பு, இப்பிறப்பின் முடிவு என்ற மூன்றையும் முழுமையாக ஆழமாக

நினைத்து தங்களுடைய முத்திக்காக விரைந்து அருளாட்சிப் பணியில் ஈடுபட வேண்டும்.

11) எண்ணற்ற கருவறைகள் விரைந்து புத்துயிர்ப்புப் பெற்று வருகின்றன. இதை உணர்ந்தாவது நம்மவர்கள் விரைந்து தங்களைப் புத்துயிர்ப்புப் பெற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும்.

12) அற்புதங்களையும், மாயங்களையும், சித்துக்களையும் கடந்த தத்துவ நாயகங்களாகவும், அருட்கொடை வள்ளல்களாகவும் உள்ள ஞானாச்சாரியார்கள் நேரடியாக அருளாட்சி அமைப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் இந்தப் பொற்காலத்தைச் சித்தர் நெறிச் செல்வர்களாக உள்ள நம்மவர்களாவது முழுமையாகப் புரிந்தும் புரியவைத்தும் உய்வடைய வேண்டும். இதில் காலதாமதம் செய்யக் கூடாது.

13) சாதாரண மக்களின் அகக்கண்களைத் திறந்து விடுவதற்காகக் குருமாரியம்மன் அருள்வாக்குக் கூற கருகுலத்தில் எழுந்தருளியாகி விட்டது. எண்ணற்ற தனிமனிதர்களைச் சத்தி உள்ளவர்களாக ஆக்குவதற்காக அண்டபேரண்டங்களில் உள்ள கணக்கற்ற குருமாரியம்மன்கள் முயற்சியுள்ளவர்களின் இல்லங்களிலிருந்து தங்கிச் செயல்பட ஆரம்பித்து விட்டார்கள். இனியாவது நம்மவர்கள் குருபீடத்தைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்பட முன்வர வேண்டும்.

14) அருட்போருக்காக அண்டபேரண்டங்களில் இருந்து குருக்காளியம்மன்கள் கருகுலம் வந்து தங்கிப் பக்குவம் உடையவர்களை எல்லாம் தேடிச் சென்று ஊக்குவிக்க ஆரம்பித்து விட்டார்கள். எனவே, நம்மவர்களில் ஒவ்வொருவரும் குருக்காளியம்மன் தன்னைத் தேடி வரக் கூடிய அளவிற்குப் பக்குவம் உள்ளவர்களாக ஆக்கிக் கொள்வதற்காகக் குருதேவரைத் தேடிச் சென்று தங்கள் தங்களுக்குரிய செயல்நிலைகளைப் புரிந்து செயல்பட ஆரம்பியுங்கள். அப்படி அல்லாமல் அந்தந்த வட்டாரத்தில் யாராவது செயல்படுவார்கள், அவர் மூலம் செயல்பட்டுக் கொள்ளலாம் என்று நினைக்கக் கூடாது. அதாவது

குருபாரம்பரிய மரபுப்படி நம்மவர்கள் ஒவ்வொருவரும் ***“குருதேவர் நமக்குள்; நாம் குருதேவருக்குள்”*** என்ற சித்தி நிலையைப் பெற முயல வேண்டும். இதுவே குருமாரியம்மன் அருள்வாக்குத் துவக்க அறிக்கையாக கருகுலத்திலிருந்து வெளியிடப்படுகின்றது. இந்த அறிக்கை அருளாட்சி நாயகத்தின் அருளாணையாக வழங்கப்பட்டது.

**அருளாணையை வழங்கும் குருவாணை ஓலைநாயகம்:**

**குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர், ஞானச்சாரியார், இந்துமதத் தந்தை, குருதேவர், பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, கருகுல ஆதீனம்.**

*நகல் எழுதியவர்:* அருள்மிகு பழநியாண்டவர் சன்னிதானம் R.இராமசாமி

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சிறுமுகை சித்தரடியார் திரு இராமசாமி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

தலைமைப்பீடம்,
7 - 9 - 1989.

**பதினெண்சித்தர் மடம், பீடம், கருகுலம்**

G.N.T.சாலை, காரனோடை, சென்னை-600067

**இந்து மறுமலர்ச்சி இயக்கம்**
**அருட்பணி விரிவாக்கத் திட்டம்**

# தமிழின அருளுலக அறிவிப்பு

பேரன்புடையீர்!

பேரருள்மிகு குருதேவர், ஞானாச்சாரியார், தலைவர், ஞானத்தந்தை, குருமகாசன்னிதானம், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் விடுத்துக் கொள்ளும் செயல்விளக்கத் திருவோலை:

எங்களுடைய பதினெண்சித்தர் மடத்தின் கீழ் உள்ள '**இந்து மறுமலர்ச்சி இயக்கம்**'; மக்களுக்கு அருளை வழங்கி நோய்களையும், பேய்களையும், மந்திரவாதிகளின் பாதிப்புக்களையும், பிற நாள் கோள் மீன் பாதிப்புக்களையும் முழுமையாக நலப்படுத்தும் அருளுலக அமைப்பான **'அருட்பணி விரிவாக்கத் திட்டம்'**; இம்மண்ணுலகின் முதல் மொழியாக உள்ள தமிழ்மொழியையும், முதல் மதமான இந்து மதத்தையும், அருளுலகத்தின் வாரிசுகளாகவும் மூலவர்களாகவும் காவலர்களாகவும் இருக்கின்ற தமிழர்களையும் பெருமைமிக்க உரிமை வாழ்வு வாழ வேண்டும் என்பதற்காகப் பாடுபடும் சமுதாய இயக்கமான '**தமிழின மொழி மத விடுதலை இயக்கம்**'; ... என்ற இம்மூன்று அமைப்புக்களும், இவற்றின் கீழ் நாற்பதுக்கும் மேற்பட்ட அமைப்புக்களின் 'நிறுவன நிர்வாகங்களும்' தமிழர், தென்னாட்டவர் (திராவிடர்), இந்தியர், உலக மக்கள் ... என்று படிப்படியாக அனைவருக்கும் எல்லாவகையான நன்மைகளையும், நலத்தையும், வளத்தையும், வளவளர்ச்சியையும் வழங்கப் பாடுபடுகின்றன.

இவற்றின் சார்பாக உங்களுடைய வட்டாரத்தில் ஆங்காங்கே அருட்கோட்டங்களையும், யாகசாலைகளையும், பதினெண்சித்தர் சிவசத்தி வார வழிபாட்டு மன்றங்களையும் வைத்து இம் மடத்தினர் பூசைகள் செய்து வருகின்றனர். இவர்கள் பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, கருகுல ஆதீனம், குருதேவராகிய எம்முடைய பதிலிகளாகப் பொதுமக்களுக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்கியும்; தமிழினம், தமிழ்மொழி, இந்துமதம், இந்துமதப் பூசைமுறைகள், கோயில்களின் பயன்கள், ... முதலியவைகளை விளக்கியும் மிகமிகச் சிறந்த தொண்டுகளை செய்து வருகிறார்கள். இவர்கள் ஆரவாரமோ, விளம்பரமோ, பணவெறியோ, ... இல்லாமல் உண்மையான மதத்தொண்டினைச் செய்து வருகிறார்கள். இவர்களை நீங்கள் அடிக்கடி சந்திப்பதுடன், பலரையும் அழைத்துக் கொண்டு சென்று சந்திக்க வேண்டும். இவர்களை-யெல்லாம் உங்களுடைய வட்டாரங்களுக்கு அழைத்துச் சென்று பேசவும், பொதுமக்களிடம் மேடைப் பேச்சு போல் சொற்பொழிவாற்றவும் செய்திடல் வேண்டும். எமது மடத்தினரிடம் அருளுலகப் பொருளுலகச் செய்திகளையும், கருத்துக்களையும், பூசைமுறைகளையும் கேட்டறிந்தும், பயிற்சிகளைப் பெற்றும் சிறப்படையலாம்.

பதினெண்சித்தர்கள்தான் இதுபோல் தங்களிடம் வரக்கூடிய எல்லாரையுமே ஏழை, பணக்காரர், உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி, படித்தவன், படிக்காதவன், ... என்ற வேறுபாடு இன்றி அடியவர்களாக ஏற்று அருள்புரிந்து, அவர்களை **பிறருக்கு அருள் வழங்கக் கூடிய அளவிற்கு ஆற்றலுடைய அருளாளர்களாக** ஆக்கித் தருகிறார்கள், தர முடியும். இதுமட்டுமல்ல, மெய்யான பத்தியுள்ள அனைவரையும் தொட்டு வாழ்த்துவார்கள். எல்லா கோயில்களுக்குமே முறைப்படி ஓமம், ஓகம், யாகம், யக்ஞம், வேள்வி, தவம், சித்தம், ஞானம், ... முதலிய முறைகளால் புத்துயிர்ப்பு செய்து அருளாற்றலை வழங்குகிறார்கள். எனவே, நன்கு சிந்தித்து பதினெண்சித்தர் மடத்துடனும், மற்றும் அதன் கிளை அமைப்புக்களுடனும் தொடர்பு கொள்ளுங்கள்.

அனைவரும் செவ்வாடை அணிந்து அருளாளர்களாக மாறுங்கள். அடிக்கடி பதினெண்சித்தர் மடத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி,**
**கருகுல ஆதீனம், குருமகாசன்னிதானம்,**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

**மனிதர்கள் எல்லா நலமும் பெற அன்றாடம் ஓதிட வேண்டிய**
**<u>அருளூறு காயந்திரி மந்தரம்.</u>**

**"ஓம் பூர்வ புலன்கள் சுவையாகுக!**
**தத்துவ வித்துக்கள் அரணுகுக!**
**பாரின்கோ தேவர் வசிக்கும் தீ மகிழட்டும்!**
**தீயே யோகப் பரஞ்சோதி யாகும்!**

<u>தொடர்பு முகவரிகள்:</u> *{தங்கள் மண்டலத்தாரின் முக்கிய முகவரிகள் எத்தனை வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளலாம்.}*

<u>அறிக்கை நன்கொடை:</u> {விளம்பரம் ஒருவர் மட்டும்தான் போட்டுக் கொள்ள வேண்டும். [500 முதல் 1000 அறிக்கைக்கு]. அதற்கடுத்த 500 முதல் 1000 அறிக்கை வரை வேறொருவர் போட்டுக் கொள்ளலாம். ஒரே அறிக்கையில் எல்லாருடைய விளம்பரமும் இருக்கக் கூடாது.}

**<u>குறிப்பு:-</u>**

1. இந்த நோட்டீசு கையகலம் அளவுள்ளதாக அமைந்திருக்க வேண்டும்.
2. முதல் பக்கத்தில் கடைசியில் கீழே காணிக்கை 0.05 காசு என அச்சிட்டு விற்பனை செய்ய வேண்டும்.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# தமிழ்மொழியே கடவுள் மொழி

உலக அளவில் தமிழகம், தமிழினம், தமிழ்மொழி ஆகிய இம்மூன்றும் தெரிவதற்கும்; இந்திய அளவில் இம்மூன்றும் சிறப்படைவதற்கும் தலைமைச் சத்திகளாய் இருப்பது இந்துவேதம் ஒன்றுதான். ஏனென்றால், ஆதிசிவனாரும் அவர் மகன் முருகப் பெருமானாரும் முறையே தோற்றுவித்த இருக்கு வேதம், அசுர வேதம், அதர்வான வேதம், யாம வேதம் எனும் நான்கு வேதங்களும், அவற்றிற்குரிய 396 நூல்களும், 4,42,368 சூலகங்களும், இந்து மதத்திற்குரிய 36 நூல்களும், இவையனைத்துக்கும் அடிப்படையான 18 மணுநீதி நூல்களும், இவற்றிற்குரிய 18 இலட்சம் சுருதிகளும், மணு தர்ம சாத்தர சாத்திர சாத்திறங்களும், நெறிகளும், முறைகளும், மரபுகளும், ஒழுகலாறுகளும், ... இவையனைத்துமே அருளூறு அமுத தெய்வீக செம்மொழியான, அண்டபேரண்டங்கள் அனைத்திலுமே அருளாட்சி புரிகின்ற அருளாட்சி மொழியான முத்தமிழ் மொழியில்தான் இருக்கிறது.

அதாவது வண்டமிழ் மொழி, ஒண்டமிழ் மொழி, பைந்தமிழ் மொழி, செந்தமிழ் மொழி, கன்னித் தமிழ் மொழி, தீந்தமிழ் மொழி, அமுதத் தமிழ் மொழி ... என்றெல்லாம் இலக்கியக் கலைஞர்களால் பாராட்டப் பெறும் முத்தமிழ் மொழிதான் வேத மொழியாக, தேவ மொழியாக, தெய்வ மொழியாக, கடவுள் மொழியாக, ஆண்டவர் மொழியாக, பத்தி மொழியாக, சத்தி மொழியாக, சித்தி மொழியாக, முத்தி மொழியாக ... அருளை அநுபவப் பொருளாக மருந்தாகவும், விருந்தாகவும் உருவாக்கித் தரக்கூடிய அருள் மொழியாக, திரு மொழியாக, தரு மொழியாக, கரு மொழியாக, குரு மொழியாக விளங்குகிறது.

64 முறை திருவிளையாடல்கள் புரிந்த சிவபெருமான்களில் ஒருவர் கூட தமிழ்மொழியைத் தவிர வேறு மொழியைப் பேசவில்லை. 63 நாயன்மார்கள், 12 ஆழ்வார்கள், 96 தொகையடியார்கள் அனைவரும் தமிழ்மொழியில்தான் செயல்பட்டிருக்கிறார்கள்...

**// 20-04-1995இல் குருதேவர் எழுதிய அஞ்சல் வடிவக் கட்டுரை ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட வாசகங்கள். //**

"இந்துக்களே! கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கடிய தீட்டு, நெடிய சாபம்."

- குருபாரம்பரிய வாசகம்



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி





12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த **ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram, Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-